# கலாபூசணம் சிதம்பரநாதன் / பொன்னார்

## ஆழத்து முத்துக்கள் 145

- ப. ஸ்ரீஸ்கந்தன் -

காத்தவராஜன் என்ற சிந்துநடைக் கூத்தின் மூலம் புகழ்பெற்ற கலைஞர்கள் பலர் ஈழத்தின் பகுதிகள் எங்கும் பரவி இருந்துள்ளனர். காத்தான் கந்தையா, செல்லக்கண்டு, கலாவிநோதன் சின்னமணி போன்று பெயர்களை அடுக்கிச் செல்லலாம். ஈழத்தில் காத்தவராஜன் கூத்து என்றதும் நினைவுக்கு வருபவர்களில் முக்கியமானவர் பொன்னர் என்று அறியப்படும் வேலுப்பிள்ளை சிதம்பரநாதன் அவர்கள். பாடசாலைகள், நூல் நிலையங்கள் என்று இளையோர் பலர் இன்று காத்தவராஜன் கூத்தில் ஈடுபட மூல காரணமாக விளங்கி வருபவர்.

மாவிட்டபுரம் மடத்தடியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தங்கச்சியம்மா இணையரின் மூத்த புதல்வனாக மாசி 01, 1952ல் பிறந்தவர். இவரது மனைவியின் பெயர் சந்தானலஷ்மி. இவர்களுக்கு யாழினி, சசீவன், தர்சினி, யசோகுலன் ஆகிய நன்மக்கள் உள்ளனர்.


மாவிட்டபுரம் அமெரிக்க மிஷன் தமிழக் கலவன் பாடசாலையில் கல்வி பயின்ற சிதம்பரநாதன் அவர்கள் பாடசாலை நாட்களிலேயே 'மார்க்கண்டேயர்' நாடகத்தில் மார்க்கண்டேயனாகவும் 'சத்தியவான் சாவித்திரி' நாடகத்தில் சத்தியவானாகவும் நடித்துப் பாராட்டுக்களையும் பரிசில்களையும் பெற்றுக் கொண்டவர்.

ஆரம்ப நாட்களில் கொல்லங்கலட்டியைச் சேர்ந்த இசைமணி க.செல்லத்துரை அவர்களிடம் இசை நாடக நுணுக்கங்களை அறிந்து கொண்டார். பின்னர் மாதனைக் கலாமன்ற உறுப்பினரும் நடிகர் திலகமாக அறியப்பட்டவருமான நாடக ஆசிரியர் து. மகாலிங்கம் அவர்களைக் குருவாகக் கொண்டு அவரது நெறியாள்கையில் பல நாடகங்களில் பங்கேற்றுச் சிறப்புச் செய்தார். குறிப்பாக சம்பூர்ண அரிச்சந்திரன் நாடகத்தில் நாரதராகவும், சத்திய கீர்த்தியாகவும் நடித்துப் புகழ் பெற்ற கூத்திசைக் கலைஞரானார்.

நாடகக் கலையைப் பொருத்தவரை 'காத்தவராஜன்' சிந்துநடைக் கூத்து இவர்களது குடும்பக் கலை என்றே கூறலாம். இவரது தாய்வழிப் பேரனார் ஆறுப்பிள்ளை பராக்கிரமசிங்கம் ஒரு புகழ்பெற்ற அண்ணாவியார். இவர் திருநெல்வேலி அண்ணாவியார் பொன்னப்பாவின் நன் மாணாக்கன். அக்காலத்தில் பொன்னப்பாவின் நெறியாள்கையில் காத்தவராஜன் நாடகத்தை மேடையேற்றி அதன் காரணமாக இன்றும் அழியாப் புகழ் பெற்ற நடிகர்களாகத் திகழ்ந்தவர்கள் சிதம்பரநாதன் குடும்பத்தினர்.

சிதம்பரநாதன் அவர்களின் கலைப் புகழுக்கும் பெருமைக்கும் வழிகாட்டிகளாக விளங்கியவர்கள் இவரது மாமனார்களான குழந்தைவேலு இராசரத்தினம், கந்தப்பிள்ளை செல்வநாயகம், முருகேசு நாகலிங்கம் மற்றும் சிறிய தந்தையர்களான கதிர்காமு அம்பலம்பிள்ளை, நல்லநம்பி வெங்கையா, வீரவாகு செல்லையா ஆகியோர். இவர்களிடம் பெற்ற அனுபவங்களால் காத்தவராஜன் சிந்து நடைக்கூத்தில் ஈடுபாடு மிக்கவராகவும், பிரபலமான அண்ணாவியாராகவும் இன்று விளங்கி வருகிறார்.

நாட்டில் நிலவிய அசம்பாவிதம் காரணமாக மாவிட்டபுரத்திலிருந்து வெளியேறி சிறுவிளானுக்கு இடம் பெயர்ந்த நாட்களில் சிறுவிளான் இளைஞர்களுக்கு இருந்த கலை ஆர்வத்துக்கு விருந்தாக காத்தவராஜன்





கூத்தைப் பழக்கி மேடையேற்றினார். பின்னர் அங்கிருந்து இடம் பெயர்ந்து நீர்வேலியில் வாழ்ந்துவரும் சிதம்பரநாதன் அவர்கள் நீர்வேலி ஜடியல் கல்வி நிலைய, நீர்வேலி கலைமகள் கல்வி நிலைய, புத்தூர் குருபரன் கல்வி நிலைய மாணவர்களுக்கு காத்தவராஜன் நாடகத்தைப் பழக்கி பல தடவைகள் மேடையேற்றம் செய்துள்ளார்.

காத்தவராஜன் சிந்துநடைக் கூத்தின் மீது இவருக்குள்ள அதீத ஈடுபாட்டின் உச்சமாக, யாழ்ப்பாணத்தில் பல நாடகக்குழுக்கள் காத்தவராஜன் கூத்தைப் போட்டிக்காக மேடையேற்றிய போது அதற்குப் பிரதம மத்தியஸ்தராகப் பணிபுரிந்து நாடகங்களை பற்றிய குறை நிறைகளையும் பாத்திரங்கள், பாடலின் அசைவுகள் குறித்த விளங்கங்களையும் விபரமாகக்கூறி அனைவரையும் அசுரவைத்தார்.

தமிழ்க்கலைக் காவலன் செ. மெற்றாஸ் மெயில் அவர்களின் அழைப்பின் பேரில் நாட்டார் வழக்கியல் கழகத்தின் 'நாட்டார் இசைமாலை' நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பல முன்னனிக் கலைஞர்களுடன் இணைந்து காத்தவராஜன் கூத்தின் சிந்து நடைப்பாடல்களைப் பாடி அனைவரையும் மகிழ்வித்தார். மேலும் மேற்படி கழகம் பழம் பெரும் கலைகளைப் பதிவு செய்து பாதுகாக்கும் பணியில் ஈடுபட்ட போது அந்த முயற்சிக்கு பெரும் ஆதரவு வழங்கி நாடகங்கள், பாடல்கள் பதிவுகளிலும் பங்கு பற்றினார். நாட்டார் வழக்கியற் கழகத்தின் காத்தவராஜன் கூத்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றபோது அவர்களுக்கு அணிசேர் கலைஞராக இருந்து ஊக்கமளித்தார்.

சிதம்பரநாதன் அவர்கள் பல்வேறு இடங்களில் நடைபெற்ற 1000க்கு மேற்பட்ட நாடக மேடையேற்றங்களுக்கு அண்ணாவியராகவும், பின்னனிப் பாடகராகவும் இருந்து கூத்துக் கலைக்குப் பெருமை சேர்த்து வருகிறார். காத்தவராஜன் தவிர, வள்ளி திருமணம், கோவலன் கண்ணகி, பூதத்தம்பி, பவளக்கொடி, பக்தநந்தனார், சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திரன் என்பன இவர் அண்ணாவியம் செய்து புகழ்பெற்ற நாடகங்களிற் சிலவாகும்.

- கலைத்துறைக்கு இவர் ஆற்றிய சேவைக்காக பல்வேறு கௌரவங்களும் விருதுகளும் இவருக்குக் கிடைத்துள்ளன. 1992ல் திருவெல்வேலி இளைஞர் மன்றத்தினர் மேடையேற்றிய காத்தவராஜன் நாடகத்துக்கு அண்ணாவியம் செய்து போது 'இசைக் காவலர்' பட்டம்.
- 1997ல் ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை மாணவர்களுக்கு நாடகங்களைப் பழக்கியமைக்காக பாடசாலை சமூகத்தினரால் வழங்கப்பட்ட 'இளங் கலை வேந்தன்' பட்டம்
- 2008ல் பாரம்பரிய மேம்பாட்டுக் கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட விழாவில் ஆசிரியர் நா. விமலநாதன் கிரீடம் சூட்டி, வைத்திய கலாநிதி ஆ. தியாகராஜா மலர்மாலை அணிவித்து, பேராசிரியர் அ.சண்முகதாஸ் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தமை.
- 2011ல் நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலய முன்றலில் இடம்பெற்ற கலைப் பண்பாட்டு விழாவில் 'நீர்வைக் குரிசில்' பட்டம்,
- 2013ல் கொழும்பு பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தினால் கேடயம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை.
- 2004ல் இலங்கை கலாச்சார அலுவல்கள் அமைச்சினால் கலாபூசணம் பட்டம்,

என்பன இவருக்குக் கிடைத்த கௌரவங்களிற் சிலவாகும்.

மாறி வரும் காலச்சூழலிலும் இசை நாடகக் கலையைப் பேணிப் பாதுகாக்கும் முயற்சியில் தீவிரமாக தன்னை அர்ப்பணித்துச் செயல்பட்டு வரும் பொன்னர் என்ற அண்ணாவியார் சிதம்பரநாதன் அவர்களைப் பதிவு செய்வதில் தாய்வீடு மகிழ்ச்சி கொள்கிறது.



sriskandan@thaiveedu.com